# A MEGA HUNGER STRIKE & RALLY



A mega hunger strike and rally demonstrated at Delhi to include Dalit Christians in to SC list with the deletion of 1950 President's order para III .

August 10th, 2011 is declared to be **"BLACK DAY - MOURNING DAY"** for Dalit Christians.

## OFFICIAL NOTIFICATION

| | |
|---|---|
| 04.08.11 | Feast of St. John Maria Vianney, |
| 06.08.11 | Transfiguration of Our Lord - Feast |
| 15.08.11 | Assumption of Blessed Virgin Mary - Solemnity |
| | Independence Day - HOLIDAY FOR THE CURIA |
| | MASS FOR THE PEOPLE |

## BIRTHDAYS

| | | | |
|---|---|---|---|
| Fr. A. Charles | 02.08.1980 | Fr. G. Backiya Regis | 27.08.1968 |
| Fr. S. George Victor | 02.08.1980 | Fr. Y. Velangkanni | 30.08.1980 |
| Fr. M. John Kurien | 12.08.1970 | Fr. M. Lawrence Rajesh | 31.08.1975 |

## HOLY FATHER'S PRAYER INTENTIONS FOR AUGUST 2011

**GENERAL:** That the World Youth Day taking place in Madrid may encourage all the young people of the world to root and found their lives in Christ.

**MISSION:** That Christians of the West, docile to the action of the Holy Spirit, may re-encounter the freshness and enthusiasm of their faith.

*Edited by: **Rev. Fr. N. Louis Rayar,** Chancellor*
*Bishop's House, Chingleput.*

# DIOCESE OF CHINGLEPUT

NEWS LETTER

website:www.chengaidiocese.org
Email : chengaidiocese@yahoo.co.in
*Ph : 27426649*
*Fax : 27431784*

**Vol. 09 No.08 August 2011**



அரசியல் சாசன உரிமையில்

சுதந்திரம் ஒளிரட்டும்!

# BISHOP'S ENGAGEMENTS

**AUGUST 2011**

| DATE | DAY | PROGRAMME | PLACE |
|---|---|---|---|
| 04ths | Mon Mor | Inauguration of the Academic Year 2011-12 St. Joseph's Minor Seminary | Mudichur |
| 06th | Sat Mor | Siver Jubilee Mass | Santhome |
| | Eve | Parents' Day St. Joseph's Mat. Hr. Sec. School | Acharapakkam |
| 07th | Sun Eve | Mass | Tagore Nagar, Pondy |
| 09th to 11th | | Ongoing Formation for the Priests of our Diocese | St. Thomas Mount |
| 14th | Sun Mor | Confirmation Mass | Tambaram |
| | Eve | Blessing of Presbytery | Guduvancherry |
| 17th | Tue Eve | Blessing of the Eucharistic Chapel | Sembarampakkam |
| 18th | Thu Mor | Consult | Bishop's House |
| | Eve | School Blessing | Maraimalai Nagar |
| 19th | Fri Eve | Flag Hoisting, St. Mary's Co-Cathedral | George Town |
| 20th | Sat Mor | Silver Jubilee Mass | Pallavaram |
| 21st | Sun Mor | Jubilee Celebration | Thirupattur |
| | Eve | Blessing of the Eucharistic Chapel | Perungudi |

| | |
|---|---|
| **August 24th to September 26th**<br>**Mission Appeal - USA** | **September 27th to September 30th**<br>**CBCI - Standing Committee Meeting - Bangalore** |

# FROM THE PROCURATOR'S DESK

## SURPLUS MASSES

**July 2011**

| | |
|---|---|
| Parish Priest, Old Perungalathur | 10,000.00 |
| Parish Priest, Palavakkam | 22,800.00 |
| Parish Priest, Chingleput | 13,500.00 |
| Rector, St. Thomas National Shrine, St. Thomas Mount | 25,000.00 |
| Parish Priest, Tambaram | 66,400.00 |
| Parish Priest, Palavakkam | 18,100.00 |

## SEMINARIANS' FUND

**July 2011**

| | |
|---|---|
| Parish Priest, Sholinganallur | 1,000.00 |
| CRI, Kancheepuram | 5,000.00 |
| Mrs. D. Fathima Mary, Neerpair | 1,000.00 |
| Mr. M.S. Abraham, Chennai | 100.00 |
| Mr. Amalraj Sundararaman, Maraimalai Nagar | 1,500.00 |
| Mr. S. M. Lourdu Samy, Madurantagam | 600.00 |
| Mrs. Rita Josephine, Chingleput | 1,500.00 |
| Mrs. Violet Jacob, Chingleput | 1,000.00 |
| Mrs. D' Veigas, Pallavaram | 500.00 |
| St. Bridget Convent, Pallavaram | 1,000.00 |
| Mrs. Victor Kanikai Mary, Tambaram | 500.00 |
| Ms. Roselin, Tambaram | 1,000.00 |
| Parish Priest, Sholinganallur | 1,000.00 |
| Mr. Varghess, Tambaram | 3,000.00 |
| Mrs. Fathima, Neerpair | 500.00 |

## BISHOP NEETHINATHAN'S EDUCATION FUND

**July 2011**

| | |
|---|---|
| Rector, St. Thomas National Shrine, St. Thomas Mount | 25,000.00 |

**Rev. Fr. P. Charles**
**Procurator**



# From Bishop's Desk...

**August 2011**

***My Dear Fathers/Brothers/Sisters,***

4th August is the Feast of our great saint **John Mary Vianney**, who has been proposed as the model and patron of all priests. This simple and unassuming priest who spent all his life in a small, obscure parish called **Ars,** has now been raised by God to become a supreme model of priestly commitment. As we celebrate his Feast, let us deepen our commitment and give ourselves whole heartedly to the ministry that is entrusted to us. Let us remember that our people expect **kind, compassionate and committed pastors and not necessarily the most gifted**.

10th August is **"Human Rights Day".** All of us have been created in the **image and likeness of God** and as such, every human person, no matter what caste or class he/she belongs to, has a dignity proper to the human person. Every human person is entitled to certain inalienable rights which should never be violated. As priests and religious, it is our special responsibility to safeguard the dignity and rights of everyone especially, the poor and the marginalized.

10th August is a **'black day'** as far as Dalit Christians are concerned, because it was on this day in 1950 that the unjust constitutional order (Scheduled Caste Order) was signed by the then President of India. By this draconian order Dalit Christians and Dalit Muslims have been denied their constitutional rights. As we continue our struggle to demand justice to the Dalit Christians we must all join hands and show our solidarity.





On 15th August, the Nation celebrates its **64th independence day**. We must certainly remember, with gratitude and affection, the great leaders of our nation and freedom fighters who laid down their lives so that we can live in a free India. The question we must ask now is: Are the fruits of this freedom enjoyed by everyone in India – especially the common man? No doubt, there have been significant developments and achievements in various fields. But the plight of the common man remains the same after all these years. With all the scandals and corruption that have become the order of the day one wonders **whether anyone really cares about the poor in this country.**

15th August is the **Feast of the Assumption of our Blessed Mother**. Mary, the humble handmaid of the Lord, has been exalted by God, assumed into heaven and crowned as the queen of heaven and earth. Mother Mary can rightly be portrayed as the hope of the lowly and the downtrodden. She will certainly intercede and obtain from God the true freedom and dignity that the poor and the marginalized are carving for.

Before I conclude, I wish to inform you that I will be away from the diocese from **24th August to 26th September**. I have been invited **to make appeals in a few Parishes in USA and Germany on behalf of our diocese**. Please do keep me in your prayers. Very Rev. Fr. Ambrose, our Vicar General, will look after the diocese in my absence.

God Bless You



**+ Rt. Rev. Dr. A. Neethinathan**
**Bishop of Chingleput**

## SECOND LIST OF TRANSFERS AND APPOINTMENTS – 2011

| PRIESTS NAME | PARISH |
|---|---|
| Fr. Christian | Cheyyur |
| Fr. Shylock Stephen | Kolapakkam |
| Fr. P. Patrick | Mahalakshmi Nagar |
| Fr. Vincent Chinnadurai | Vettuvankeni |

**VICAR FORANE**

| | |
|---|---|
| Fr. P. Ambrose | **Vicariate of St. Joseph**, Chingleput |
| Fr. A. Cyrilraj | **Vicariate of Our Lady of Good Voyage**, Cheyyur |
| Fr. Joe Fernando OMI | **Vicariate of Our Lady of Good Health,** Kancheepuram |
| Fr. Christuraj | **Vicariate of St. Antony**, Palavakkam |
| Fr. Peter SSS | **Vicareiate of St. Francis Xavier,** Pallavaram |

**+ Rt. Rev. Dr. A. Neethinathan**
**Bishop of Chingleput**

**Rev. Fr. N. Louis Rayar**
**Chancellor**

## RELIGIOUS PRIESTS APPOINTMENTS - 2011

**PARISH PRIESTS**

| | |
|---|---|
| Pozhichalur | Rev Fr Irudayaraj Irudayanathan CPPS |

**ASSISTANTS**

| | |
|---|---|
| Sholinganallur | Rev Fr A Amalraj OSM |
| Valan Nagar | Rev Fr Vincent OCD |

**+ Most Rev Dr A Neethinathan**
**Bishop of Chingleput**

**Rev Fr N Louis Rayar**
**Chancellor**





# NEWS FROM THE PASTORAL CENTRE

## ONGOING FORMATION FOR THE PRIESTS OF OUR DIOCESE

**Dear Fathers,**

TNBC has announced that this year is to be celebrated as the ***Year of Catechesis***, with a motto '**Catechism for all**'. The formal inauguration of this year was celebrated on the 26th June, 2011 in our diocese by our beloved Bishop and in continuation many programmes have been evolved at Regional level as well as the Diocesan level.

We are aware that you have inaugurated this year at parish and institutional level and to give thrust to the motto ***"Catechism for all"***, you must be evolving certain programmes in a meaningful way.

Our beloved Bishop in his pastoral letter during the month of July has called every one of us to recognize the need and importance of Catechism in our Church communities and to be a model and inspiration in the task of Catechism and Evangelization. We are also advised to bear in mind that ***Catechesis is a life-long process and it enables the community to live a Christian way of life - a Gospel way of love***.

Keeping all this in mind, an ***"Ongoing Formation"*** programme is being organised for all the priests of our diocese in the following manner, which I hope, would benefit every one of us to lead the people entrusted to us in a meaningful way:-

**First Batch:**

will commence from 09.08.2011 at 4.00pm and will end at 4.00pm on 10.08.2011. This will be for the priests ordained after the year 2002 i.e., after the formation of our diocese.

**Second Batch:**

will commence from 10.08.2011 at 4.00pm and will end at 4.00pm on 11.08.2011. This will be for the priests ordained upto the year 2002 i.e., who were ordained before the formation of our diocese.

**Venue:** DMI Retreat Centre, St. Thomas Mount Hill Top, St. Thomas Mount

## PROGRAMME

| First Day | |
|---|---|
| 04.00pm | Registration |
| 06.00pm | Holy Mass |
| (in memory of St. John Maria Vianney) | |
| 07.30pm | Supper |
| 08.30pm | Meditation |
| 09.00pm | Rest |

| Second Day | |
|---|---|
| 06.30am | Rising |
| 07.00am | Holy Mass |
| 07.45am | Break fast |
| 08.45am | First Session |
| 10.00am | Tea Break |
| 10.30am | Second Session |
| 11.30am | Break |
| 11.45am | Group Discussion |
| 01.00pm | Lunch |
| 02.30pm | General Session |
| 03.30pm | Bishop addresses the gathering |
| 04.00pm | Tea |

***Programme Concludes***

I earnestly request every one of you to participate without fail and to get benefited.

**Fr. S. George Stephen**
Director, Pastoral Centre

# அன்பியம்

## அன்பிய பேரவை கூட்டம்

தமிழக ஆயர் பேரவையின் அன்பிய மையமானது தனது மாநில பேரவை கூட்டத்தை, தஞ்சாவூர் மேய்ப்புப்பணி மையத்தில் ஜீலை மாதம் 22 ம் தேதி மற்றும் 23 ம் தேதிகளில் **மேதகு ஆயர் தேவதாஸ் அம்புரோஸ்** (தலைவர், அன்பிய பணிக்குழு) அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தியது.

இத்தமிழக அன்பிய பேரவைக் கூட்டத்தில் 16 மறைமாவட்டங்களிலிருந்து 90 அன்பிய பொறுப்பாளர்கள் மற்றும் 13 மறைமாவட்ட அன்பிய செயலர்கள் பங்கெடுத்தனர். நமது மறைமாவட்டத்திலிருந்து அன்பியசெயலர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் மற்றும் 5 மறைமாவட்ட நிர்வாகிகள் பங்கெடுத்தனர். நம் மறைமாவட்ட செயலர் இந்த இரண்டு நாள் கூட்டத்தில் அன்பியம் சந்திக்கும் சவால்கள் என்ற தலைப்பில் கருத்துரை ஆற்றியது பெருமைக்குரியதாக அமைந்தது.





**இக்கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் முன் வைக்கப்பட்டன:**

1. அன்பியம் இல்லாத பங்குகளில் அன்பியத்தை உருவாக்கி செயல்படுவது.
2. மறைமாவட்ட அன்பிய பேரவை ஏற்படுத்தி செயல்படுவது.
3. மறைமாவட்ட அன்பிய பணிகளுக்கான தொலைநோக்கு இலக்கு மற்றும் செயல்திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவது.
4. மறைமாவட்டங்களில் அன்பிய பணிக்குழுவிற்கென முழுநேர அருட்பணியாளரை நியமித்து ஊக்கப்படுத்துவது.
5. மற்ற ஆயர் பேரவையின் பணிக்குழுக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது போல் அன்பியப் பணிக்குழுவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுப்பது.
6. பங்குத்தந்தையர்களுக்கு, மறைமாவட்ட ஆயர் அனைத்து பங்குகளிலும், கிளைப்பங்குகளிலும் அன்பிய உருவாக்கத்தை கட்டாயப்படுத்துவது. அதன் மூலம் பங்கேற்பு அமைப்புகளை உருவாக்கம் செய்ய உத்தரவிடுவது.
7. அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகளின் பயிற்சி இல்லங்களில் (குருகுலத்தில், நவ கன்னியர் இல்லங்களில்) அன்பியம் பற்றி புரிதல் அளிக்க ஆவண செய்யதல்.
8. அன்பியங்களில் குழுத்திருப்பலி நிறைவேற்ற ஊக்கப்படுத்துதல்.
9. தமிழக அன்பிய பேரவை 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடுதல்.
10. தமிழக அன்பியங்களுக்கான அமைப்பும், ஒழுங்குகளும் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு புதுப்பிக்கப்படல்.
11. ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் செயலருடன் ஒரு பிரதிநிதி இணைந்து தமிழக அன்பிய செயற்குழு அமைத்தல்.
12. இன்னும் 6 மாதத்தில் அனைத்து மறைமாவட்டங்களிலும் அன்பியப் பேரவை அமைத்தல்.
13. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் அன்பிய செயற்குழு விரைவில் அமைத்திடல்.
14. அன்பிய ஆய்விற்கான தரவுகளை ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் முடித்து மாநில அலுவலகத்திற்கு அனுப்புதல்.
15. மறைமாவட்டத்திற்கு ஒரு முழு நேர பொதுநிலையினர் அன்பிய பணியாளராக நியமிக்கப்படல்.

16. மறைமாவட்டங்களிலும், பங்குகளிலும் அன்பிய பொறுப்பாளர்களுக்கு தொடர் உருவாக்கப்பயிற்சிகள் நடத்துதல்.

17. மறைக்கல்வி ஆண்டில் அன்பியங்களில் மறைக்கல்வி தரப்பட்டு விசுவாசம் ஆழப்பட உதவுதல்.

## களப்பணி மற்றும் பயிற்சி

### மாம்பாக்கம் பங்கு

ஜீலை 8 ம் தேதி முதல் 9 ம் தேதி வரை மாம்பாக்கம் பங்கில் நாள் முழுவதும் வீடுகள் சந்திப்பு நடைபெற்றது. பின் மாலையில் மாதிரி அன்பிய கூட்டம் நடத்தப்பட்டது. அதன்பின் அன்பிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

### வேடந்தாங்கல் பங்கு

ஜீலை 9 ம் தேதி வேடந்தாங்கல் பங்கில் வீடுகளை சந்தித்து மாதிரி அன்பிய கூட்டம் நடத்தப்பட்டது. பின் அன்பிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் ஜீலை 10 ம் தேதி ஞாயிறு திருப்பலியுடன் அன்பிய பொறுப்பளர்களுக்கு அரை நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து பங்கு பேரவையும், அன்பிய செயற்குழுவும் உருவாக்கப்பட்டது.

### பாப்பநல்லூர் பங்கு

ஜீலை 17 ம் தேதி திருப்பலி முடிந்தவுடன், அன்பிய பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அதன்பின் பொறுப்பாளர்களின் பணிகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இனிவரும் காலங்களில் ஒன்றுபட்டு அன்பிய பணிகளை சிறப்புடன் செய்ய முன் வருவோம் என்று பொறுப்பாளர்கள் உறுதி கூறினர்.

### செங்கல்பட்டு பங்கு

ஜீலை 17 ம் தேதி செங்கல்பட்டு பங்கில் அன்பிய ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டது.

| | |
|---|---|
| ஒருங்கிணைப்புகுழு தலைவர் | : திரு. ஆரோக்கிய தாஸ் |
| ஒருங்கிணைப்புகுழு துணைத்தலைவர் | : திரு. உத்தரிய தாஸ் |
| ஒருங்கிணைப்புகுழு செயலர் | : திருமதி. விக்டோரியாபிரான்சிஸ் |
| ஒருங்கிணைப்புகுழு துணைச்செயலர் | : திரு. இயேசுதாஸ் |





### மாம்பாக்கம் பங்கு

ஜீலை 24 ம் தேதி, ஞாயிறு அன்று மாம்பாக்கம் பங்கில் காலை 08.30 மணிக்கு திருப்பலியுடன் அன்பிய பயிற்சி துங்கியது. திருப்பலிக்கு பிறகு 12 அன்பியத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பங்குபேரவை மற்றும் அன்பிய செயற்குழு தேர்வுசெய்யப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. பெஞ்சமின் நேசமணி அவர்கள் பயிற்சிக்கு தேவையான அனைத்தையும் தயார் செய்து வழிநடத்தினார்.

### வழிநடத்தியவர்கள்:

அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன், வேதியர். பிரான்சிஸ், வேதியர். அருள்தாஸ், திரு. ஜோசப் செல்வராஜ், திரு. ஸ்டீபன், திரு. ராஜன் பால், திரு. ரபேல்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

## மறைக்கல்வி பணிக்குழு

- மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு ''எல்லோருக்கும் மறைக்கல்வி'' என்ற விருதுவாக்கோடு நமது மறைமாவட்டத்தில் 26.06.2011 (ஞாயிறு) காலை 10.00 மணிக்கு ஜெபத்துடன் ஒரு நாள் கருத்தரங்கு ஆரம்பிக்கப்பட்டது மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழு செயலர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் அனைவரையும் வரவேற்க மறைக்கல்வி ஆண்டு சிறப்பாக துவங்கப்பட்டது. **சகோதரர் சந்தியாகு** அவர்கள் பிரச்சனைகளை சந்தித்தல், சூழ்நிலையை அறிதல் என்ற தலைப்பில் பாடல்கள் மற்றும் ஒரு சில நிகழ்வுகள் மூலம் விவிலிய பின்னணியில் பகிர்ந்துகொண்டார்.
- பிறகு மறைமாவட்ட முதன்மைகுரு **அருட்பணி. அம்புரோஸ்**, அவர்கள் மறைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், மறைக்கல்வி கற்கும் மாணவ, மாணவியருக்கு பாடாமாக மாறவேண்டும் என்றும் மறைக்கல்வியின் அவசியத்தைப்பற்றியும், தேவையைப்பற்றியும் உணர்த்தினார். மறைமாவட்ட செயலக செயலர் **அருட்பணி. லூயிஸ் ராயர்** அவர்கள் மறைக்கல்வியின் ஆழ்ந்த அர்த்தத்தை உணர்த்தும் வகையில் தனது வாழ்க்கையிலிருந்து ஒரு சில நிகழ்வுகளை கூறி பெற்றோரின் பொறுப்பையும், குடும்பம் தான் மறைக்கல்விக்கு முதன்மையானதும் முக்கியமானதும் என்பதை எடுத்துக்கூறி மறைக்கல்வி வாழ்க்கை கல்வி என்று தெளிவாக எடுத்துரைத்தார்.

- அருட்பணி. அல்போன்ஸ் (TNBCLC, திண்டிவனம்) அவர்கள் உண்மையான மறைக்கல்வி இயேசுவின் மனநிலையை உருவாக்க வேண்டும். மறைக்கல்வி சமயம் சார்ந்த, அறிவு சார்ந்த படிப்பாக இருக்க வேண்டும். இறையாட்சியின் குழுமமாகவும் மாறவேண்டும். பெற்றோரே மறைக்கல்வியின் ஆசிரியர். அன்பியம் மறைக்கல்வியின் தளமாக அமைதல் வேண்டும் என்று கூறினார்.
- நமது பாசமிகு மேதகு ஆயர் நீதிநாதன் அவர்கள் தலைமையில் திருப்பலியோடு இவ்விழா சிறப்பாக நிறைவுபெற்றது. இதில் குருக்கள், அருட்சகோதரிகள், ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்கள், பள்ளி மறைக்கல்வி ஆசிரியர்கள், அன்பிய பொறுப்பாளர்கள் மற்றும் பக்த சபைகள் என 400 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்துகொண்டனர். திருப்பலியின் முடிவில் மறைக்கல்வி ஆண்டு ஜெபம் வாசிக்கப்பட்டது. பிறகு கடந்த மறைக்கல்வி ஆண்டு தேர்வுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் மாணவர்களுக்கு அந்தந்த பள்ளி ஆசிரியரிடம் வழங்கப்பட்டது.
- ஜீலை 3 ம் தேதி தேசிய திருத்தலமான புனித தோமையார் மலையில் நமது ஆயர் அவர்களாலும், மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களாலும் மறைக்கல்வி ஆண்டு திருத்தலத்தில் அதிகாரப்பூர்வமாக துவங்கப்பட்டது.
- ஜீலை 9 ம் தேதி அச்சிறுப்பாக்கம், மழைமலை மாதா திருத்தல பௌர்ணமி திருப்பலியில் மறைக்கல்வி ஆண்டு சிறப்பாக துவங்கப்பட்டது.
- பல்லாவரம், புனித தெரேசாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஜீலை 11 ம் தேதி முதல் 15 ம் தேதி வரை அன்பு, சமாதானம், மன்னிப்பு, இரக்கம் ஆகிய தலைப்புகளில் மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு மறைக்கல்வி வாரம் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்களை குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு தலைப்பிலும் அடையாளங்களோடு (Symbol) ஒவ்வொரு நாளும் கொண்டாடினார்கள். கலைநிகழ்ச்சி, மாறுவேடப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பாட்டுப்போட்டி மற்றும் விவிலிய மனப்பாட போட்டி நடத்தப்பட்டது. இதில் இந்து, முஸ்லிம் என அனைத்து மாணவிகளும் ஆர்வமுடன் பங்கேற்றனர். மாணவிகளுக்கு திருவிவிலியம் புதிய ஏற்பாடு, திருக்குடும்ப பக்திமாலை, ஜெபமாலை ஆகியவை பரிசுகளாக வழங்கப்பட்டது. நிறைவு விழாவாக மறைமாவட்ட மேய்ப்புப்பணி மற்றும் மறைக்கல்வி பணிக்குழு செயலர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் மறைக்கல்வி ஆண்டு கொடியை ஏற்றி திருப்பலி நிறைவேற்றினார். இவ்விழாவை சிறப்பாக வழிநடத்திய தலைமை ஆசிரியர் அருட்சகோதரி. மரிய பிலோ அவர்களையும் ஆசிரியர்களையும் வாழ்த்தி பாராட்டுகிறோம். அனைத்து பள்ளிகளும் மறைக்கல்வி ஆண்டை சிறப்பாக கொண்டாட வாழ்த்துகிறோம்.





- ஜீலை 17 ம் தேதி கூடுவாஞ்சேரி, நல்லாயன் பங்கில் **“எல்லோருக்கும் மறைக்கல்வி”** என்ற தலைப்பில் மறைக்கல்வி ஆசிரியர்கள், பங்குபேரவை உறுப்பினர்கள், அன்பிய பொறுப்பாளர்கள், மரியாயின் சேனை உறுப்பினர்கள் என அனைத்து பக்த சபையினருக்கும் மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் மறைக்கல்வி பணிக்குழு செயலர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் கலந்து கொண்டு மறைக்கல்வி ஆண்டை எவ்வாறு சிறப்பிக்கலாம், என்று வலியுறுத்தி கூறினார். கூட்டத்தின் இறுதியில் மறைக்கல்வி மன்றம் உருவாக்கப்பட்டு அதில் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இப்பங்கை வாழ்த்தி பாராட்டுகிறோம்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

## இளைஞர் பணியகம்

### பங்களவில்

ஜீன் 25 ம் தேதி மதுராந்தகம் பங்கில் புனித அந்தோணியார் ஆலயத்தில் இளைஞர் ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஜீன் 26 ம் தேதி பெருங்குடி பங்கில் இளைஞர் ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஜீலை 5 ம் தேதி தர்காஸ்ட் பங்கில் இளைஞர் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது.

### மறைமாவட்ட அளவில்

ஜீலை 3 ம் தேதி மறைமாவட்ட பொறுப்பாளர்களுக்கான நிர்வாகக்குழு கூட்டம் மெல்ரோசாபுரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொறுப்பாளர்கள் ஆறுமாத காலத்திற்கு தேவையான செயல் திட்டங்களை பற்றி கலந்தாலோசித்தனர்.

ஜீலை 17 ம் தேதி மறைமாவட்ட பொதுக்குழு கூட்டம் நமது மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்றது. இதில் நமது மறைமாவட்டத்தின் பல்வேறு பங்கிலிருந்து 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர். இதில் ஆறுமாத காலத்திற்கு தேவையான செயல் திட்டங்கள் பற்றி கலந்தாலோசித்தனர்.

**தேசிய அளவில்**

மறைமாவட்ட இயக்குநர்களுக்கான கூட்டம் தேசிய அளவில் ஜீலை 7 ம் தேதி முதல் 12 ம் தேதி வரை நாக்பூரில் நடைபெற்றது.

## இளம் கிறிஸ்துவ மாணாக்கர்/ இளம் மாணாக்கர் இயக்கம்

**மறைமாவட்ட அளவில்**

இளம் கிறிஸ்துவ மாணாக்கர்/இளம் மாணாக்கர் வழிகாட்டி ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கருக்கான கூட்டம் நமது மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்றது. இதில் ஆசிரியர்கள் மாணவர்கள் என 90 பேர் கலந்துகொண்டனர்.

**பள்ளி சந்திப்பு**

| **தேதி** | **பள்ளி** |
|---|---|
| 20.07.2011 | அமல அன்னை உயர்நிலைப்பள்ளி, மாம்பாக்கம் |

**அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ்**
**செயலர்**

## மரியாயின் சேனை

ஜுலை 17 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்டத்தின் 102 சேனையாளர் கோணாங்குப்பம் பெரிய நாயகி மாதா ஆலயத்திற்கு சென்று "வெளி விழா" (Out Door Function) கொண்டாடினர். விவிலியம் மற்றும் சேனை கைநூலிருந்து வினாடி - வினா மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. அங்குள்ள மரியாயின் சேனையாளரை சந்தித்து கூட்டம் நடத்தும் முறை குறித்து வழிகாட்டப்பட்டது. நாள் முழுவதும் எங்களோடு இருந்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கிய பாப்பநல்லூர்





உதவிபங்குத்தந்தை அருள் அவர்களுக்கு நன்றி. இந்த வெளி விழாவிற்கு முழு உற்சாகமும் வழிகாட்டுதலும் அளித்த மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களுக்கு கொமித்சியத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**திரு. அந்தோணி சாமி**
**செயலர்**

## பெண்கள் பணிக்குழு

தமிழக ஆயர் பேரவையின் பெண்கள் பணிக்குழுவின் பயிற்சி பாசறை ஜீலை 8 ம் தேதி முதல் 10 ம் தேதி வரை திருச்சி பொதுநிலையினர் உருவாக்க மையம் பிராட்டியூரில் நடைபெற்றது. இப்பயிற்சி பாசறையில் மூன்று பெண்கள் பங்கேற்று பயன்பெற்றனர்.

**திருமதி. வில்லி**
**செயலர்**

## பொதுநிலையினர் பணிக்குழு

தமிழக ஆயர் பேரவையின் தமிழக பொதுநிலையினர் பணிக்குழுவானது அனைத்து மறைமாவட்ட பணிக்குழு செயலர்களின் கூட்டத்தை ஜீலை 2 ம் தேதி திருச்சி பிராட்டியூர், தமிழக உருவாக்க மையத்தில் நடத்தியது. அனைத்து மறைமாவட்ட பணிக்குழு செயலர்களும் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்டத்தின் சார்பாக பொதுநிலையினர் பணிக்குழு செயலரும், இணைச்செயலரும் கலந்து கொண்டனர்.

ஜீலை 3 ம் தேதி ஞாயிறு அன்று தமிழக ஆயர் பேரவையின் பொதுநிலையினர் பணிக்குழு "பொது நிலையினர் ஞாயிறாக" சிறப்பிக்க எல்லா மறைமாவட்டங்களையும் கேட்டுக்கொண்டது. அதற்கான சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள், திருப்பலி வழிபாட்டு கையேடுகளையும் அனுப்பி வைத்தது.

நமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளுக்கும் அதனை அனுப்பி வைத்து பொதுநிலையினர் ஞாயிறை பங்குகளில் சிறப்பாக கொண்டாட பங்குத்தந்தையர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**திரு. இக்னேஷியஸ்**
**செயலர்**